## தொடர் பிரச்னைகள் ஏற்பட்டு வரும் நிலையில்

# மெட்ரோ ரயில் நிலையங்களில் பாதுகாப்பு ஆணையர் திடீர் ஆய்வு

## அதிகாரிகள் அதிர்ச்சி



சென்னை, ஆக 4: சென்னையில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் தொடர் பிரச்னையை அடுத்து சென்ட்ரல், எல்.ஐ.சி உள்ளிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களை மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மனோகரன் நேற்று திடீரென ஆய்வு செய்தார்.

சென்னையில் கடந்த பிப்ரவரி மாதம் டி.எம்.எஸ்–வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவை இயக்கப்பட்டது. இதையடுத்து 45.1கி.மீட்டர் தூரத்திற்கு முழுமையாக மெட்ரோ ரயில் சேவை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இந்தநிலையில், கடந்த சில நாட்களாகவே மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் திடீர் தொழில்நுட்ப கோளாறு மற்றும் பிரச்னைகள் ஏற்படுவது வாடிக்கையாகி வருகின்றது.

நேற்று முன்தினம் கீழ்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்த கண்ணாடி கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாகவே இதுபோன்ற விபத்துக்கள் தொடர்ந்து நடைபெறுவதாக பயணிகள் தரப்பில் இருந்து தொடர் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மனோகரன் நேற்று திடீரென சென்ட்ரல், டி.எம்.எஸ், தேனாம்பேட்டை, அரசினர் தோட்டம், எல்.ஐ.சி உள்ளிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் நேரடியாக சென்று ஆய்வு நடத்தினார். அப்போது, அங்கிருந்த ஊழியர்களிடம் குறைபாடுகள் குறித்தும் பயணிகள் வருகையும், அவர்களுக்கு செய்துதரப்படும் வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். இதேபோல், விமானநிலையம் முதல் வண்ணாரப்பேட்டை இடையிலான வழித்தடத்தில் ரயிலில் சென்றும் ஆய்வு செய்தார். சுமார் 4 மணி நேரமாக இந்த ஆய்வு நடைபெற்றது.

இதுகுறித்து மெட்ரோ ரயில்வே ஊழியர்கள் கூறுகையில், "பிப்ரவரி மாதம் மெட்ரோ ரயில் சேவை முழுமையாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அப்போது சில மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகள் உள்ளே வரக்கூடிய நுழைவாயில்கள் மற்றும் சுரங்கபாதைகள் கட்டிமுடிக்கப்படாமல் இருந்தது. தற்போது, இது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

இந்த நுழைவாயில்கள் மக்கள் பயன்பாட்டிற்கு வர உள்ளதையடுத்து இதை முழுமையாக ஆய்வு செய்தார். அப்போது, கடந்த சில நாட்களாக ரயிலில் ஏற்பட்டு வரும் தொடர் பிரச்னைகள் குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பயணிகளுக்கு செய்து தரப்படும் வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்" என்றனர்.